Registered as a Newspaper in Ceylon   விலை சதம் 15 ★★

10 AUG 1972 UNDERGRADUATE LIBRARY


# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண் 49
போன்: 389
தேசிய தினசரி
மலர் 14
இதழ் 181

பரிதாபி ஆடி 26 ரபி: அவ்வல் 29 வியாழக்கிழமை (10-8-72)



அண்ணா கோப்பி

சுகாதார முறைப்படி உயர்ம் முன்னிலையில் வறுத்து அரைக்கப்பட்டு நறுமணத்துடன் சுவை குன்றாமலும் பத்திரப் படுத்தி உடனுக்குடன் பக்கட்டுகளில் அடைக்கப்பட்டு விற்பனையாகின்றது.

அண்ணா தொழிற்சாலை
(இனா)
இல. 4, மக்கள் சந்தை
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.


# தி. மு. க. அரசாங்கத்தின் மீது அவநம்பிக்கை தீர்மானம்

## மக்கள் மத்தியில் அதிருப்தி நிலவுவதாக குற்றச்சாட்டு

சென்னை, ஆகஸ்ட் 9
தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி தலைமையிலான தமிழ்நாடு திராவிட முன்னேற்றக் கழக அமைச்சரவையின் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரப்பட்டுள்ளது. தமிழக சட்டப்பேரவை இன்று காலை கூடியபோது இத் தீர்மானம் தாக்கல் செய்யப்பட்டது.

அமைச்சரவை மீது நம்பிக்கையின்மை தெரிவிக்கும் மற்றும் நான்கு தீர்மானங்கள் இன்று தாக்கல் செய்யப்பட்டபோதிலும், சுதந்திரா கட்சியைச் சேர்ந்த டாக்டர் ஹாண்டே முன்மொழிந்த முதலாவது அமைச்சரவை மீதான நம்பிக்கையில்லாத் தீர்மானம் இன்று எடுத்துக்கொள்ளப்பட்டது.

தீர்மானத்தை முன்மொழிந்த சுதந்திரா டாக்டர் ஹாண்டே பேசுகையில் சபைக்கு வெளியே மக்கள் மத்தியில் அதிருப்தி பலமாக நிலவுகிறது. அண்மையில் நடந்த விவசாயிகள் கிளர்ச்சியில் துப்பாக்கிப் பிரயோகத்தைத் தவிர்த்திருக்கலாம். ஆறும் ஏற்பட்ட உயிர்ப்பலிகளுக்கு தி.மு.க. அரசே காரணம். விவசாயிகளை முன்கூட்டியே முதல்வர் சந்தித்துப் பேசியிருக்கலாம். தனிநாடு கோரிக்கை மதுரை தி.மு.க. மாநாட்டில் மறைமுகமாக தெரிவிக்கப்பட்டது. சிகரன் தொழிலாளர் மத்தியில் வெறுப்பை ஏற்படுத்தியுள்ளது" என்றார்.

டாக்டர் ஹாண்டேயின் பிரேரணையை விவாதத்துக்கு எடுக்கவேண்டுமென்று 27 எதிர்க்கட்சி உறுப்பினர் எழுந்து நின்றனர்.

டாக்டர் ஹாண்டேயின் நம்பிக்கையில்லாத் தீர்மானம் மீது பேசுவதற்கு எந்தெந்தக் கட்சிகளுக்கு எவ்வளவு நேரம் ஒதுக்குவதென்றும், எதிர்க்கட்சித் தலைவர்கள் இது சம்பந்தமாகப் பேசுவதற்கு ஆதரவு தெரிவிப்பதற்கும் உடனடியாக விவாதத்தை ஆரம்பிக்காமல் மற்றொரு தினத்தில் நடத்துவதே நல்லதென்றும் தெரிவிக்கப்பட்டது.

கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் திரு கே. டி. கே. தங்கமணி கொண்டுவந்த கண்டனப் பிரேரணை மீதும் விவாதம் நடைபெறவிருக்கிறது.

## இன்று வண்ணை அம்மாள் தேர்த்திருவிழா

யாழ்ப்பாணம், வியாழன்
வண்ணை சிவன்கோவில் தேவி மகோற்சவம் 9-ம் நாளாகிய தேர்த்திருவிழா இன்று பகல் 10-30க்கு ஆரம்பிக்கும். பூஜையாகி 12 மணிக்கு ரதாரோகணமும் மாலை 5 மணிக்கு ரதாவரோகணமாகி அம்பாள் மண்டபத்துக்கு எழுந்தருளியிருக்கை சேர்தலும் இடம்பெறும். தொடர்ந்து செல்வி ராதா சோமசுந்தரத்தின் "இளைஞன்" என்னும் கதாப்பிரசங்கமும் இடம்பெறும்.

அம்பாள் ரதோற்சவத்தின் சிறப்பு நிகழ்ச்சியாக அன்புக்கட்டி திருப்பூங்குடி வி. க. ஆறுமுகம் குழுவினரின் வில்லிசை விருந்தும் பிற்பகல் மூன்று மணிக்கு "பக்தவெள்ளி" என்ற தலைப்பில் நடைபெறும். பின்னணி இசை அனுசரணை பூரணை அம்பலப்பிள்ளை, வண்ணை வேணு மகாதேவன் திரு. கே. சபாரத்தினம், வைரமணி என். தங்கம். ஆகியோர் இக்குழுவில் இடம்பெறுவர்.

## இலவச அரிசிப் பிரச்னை இறுதி முடிவில்லை

கொழும்பு, புதன்
அரிசிப்பிரச்னை நாட்டில் மாயாஜாலம் செய்து வருகிறது. நாட்டில் இதுவரை கொடுத்துவரும் இலவச அரிசியை நிறுத்தி காசுக்கான அரிசியைக் கொடுப்பதா அல்லது இலவச அரிசிக்குப் பணம் வசூலிப்பதா என்ற பிரச்னையை அரசாங்கம் காலவரையறையின்றி பிற்போட்டுள்ளதாக அறியப்படுகிறது.

இப்பிரச்னையில் அமைச்சரவை ஒரு முடிவுக்கு வரமுடியாமல் இருக்கின்றது. அரசாங்கத்தரப்பிலுள்ள ஒரு சாராரின் இலவச அரிசியை நிறுத்தும்படியும் மறுசாராரின் இதனைக் கடுமையாக எதிர்த்து வருவதாகவும் தெரிகிறது.

அமைச்சரவையில் இவ்விஷயமாக பல தீர்மானங்கள் இருந்தபோதிலும் இவ்விஷயத்தில் எல்லோரும் ஏற்றுக்கொள்ளக்கூடியதான ஒரு பொதுத் திட்டம் இதுவரை முடியாமல் இருப்பதாகவும் சொல்லப்படுகிறது.

அரசாங்க ஆட்சிமன்றக் குழுவில் பெரும்பாலானவர்கள் இலவச அரிசி வெட்டை கடுமையாக எதிர்த்துவருவதாகவும், ஐக்கியமுன்னணியினர் கடந்த தேர்தல் காலத்தில் பொதுமக்களுக்குக் கொடுத்த வாக்குறுதியை இது மீறும் செயலாகும் என்றும் அவர்கள் தெரிவித்து வருகின்றனர்.

## 15ம் திகதி கடைசித்தினம்

கொழும்பு, வியாழன்
அடுத்த ஆண்டில் முதலாம் வகுப்புக்கு பாடசாலைகளில் தமது பிள்ளைகளுக்கு இடம்கோரி விண்ணப்பிப்பவர்கள் செப்டம்பர் 15ம் திகதிக்கு முன் விண்ணப்பிக்க வேண்டும்.

## பத்து வீத கழிவில் கல்வி திணைக்கள நூல்கள்

யாழ்ப்பாணம், வியா.
யாழ் மத்திய கல்லூரியில் நேற்றுக்காலை ஆரம்பமான கல்வி விஞ்ஞானப் பொருட்காட்சியில் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் கல்விப் பாடப் புத்தகங்களும் பத்துவீதக் கழிவுடன் விற்கப்படுகின்றன. இதனால் தமக்கு குறைந்த விலையில் புத்தகங்களைப் பெறக்கூடிய வாய்ப்பினை கல்வித்திணைக்களம் ஏற்படுத்திக் கொடுத்திருப்பது குறித்து மாணவர்கள் மகிழ்ச்சி தெரிவித்தனர்.

இந்தவிஞ்ஞான கல்விப் பொருட்காட்சியும் விற்பனையும் கல்வி வெளியீட்டுத் திணைக்கள உதவி ஆணையாளர் திரு. வி. சதாசிவம் மேற்பார்வையில் நடைபெறுகிறது. இதற்கான ஏற்பாடுகளை கல்வி வெளியீட்டுத் திணைக்கள ஆணையாளர் திரு. டபிள்யு. டி. சி. மகாதந்திலா செய்துள்ளார்.

கல்வி வெளியீட்டுப் புத்தகங்கள் எப்படித் தயாராகின்றன என்பதனை ஸ்ரீலங்கா அச்சகக் கூட்டுத்தாபனம் செய்கைமூலம் விளக்குகிறது. முதல் முறையாக யாழ்ப்பாணத்தில் நடைபெறும் இச்செய்கை முறைகளை மேற்பார்வையிடும் பொறுப்பு பொதுமுகாமையாளர் திரு. விக்கிரமாவும் இங்கு வந்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இத்தகைய காட்சி இடம் பெறுவது இதுவே முதல் தடவையாதலால் பெருந்தொகையான மாணவர்களும், பொதுமக்களும் இதனைக் காண திரள்கின்றனர். இக்கண்காட்சி நாளை முடிவடையும்.

......

## நகைகள் அணிந்து செல்லாதீர்!

### மரண விசாரணையில் அதிகாரி எச்சரிக்கை

கொழும்பு, புதன்
பெண்கள் வெளியில் செல்லும்போது விலையுயர்ந்த நகைகளை அணிந்து செல்லவேண்டாமென கொழும்பு நகர மரண விசாரணை அதிகாரி திரு. ஜே. என். பி. வீரக்கோன் எச்சரிக்கை செய்துள்ளார். வெளி ஆற்றில் காணப்பட்ட ஐ. எவிஸ் பெரேராவின் மரணவிசாரணையின் போதே அவர் இதனை தெரிவித்தார்.

எவிஸ் பெரேராவின் சடலம் ஆற்றங்கரையில் கண்டெடுக்கப்பட்டதை தொடர்ந்து மரண விசாரணை நடைபெற்றது.

நாட்டின் தலைநகரத்தில் உள்ள வீதிகளில் பாதசாரிகள் பாதுகாப்பாக செல்ல முடியாதநிலை உள்ளதென்றும் முடிச்சுமாறிகளும் திருடர்களும் சில சந்தர்ப்பங்களில் பலாத்காரத்தைப் பாவிக்கிறார்களென்றும் மரணவிசாரணை அதிகாரி மேலும் குறிப்பிட்டார்.

பெண்கள் நகைகளைப் பாதுகாப்பான இடத்தில் வைத்துவிட்டே பிரயாணங்களை மேற்கொள்ள வேண்டுமென்றும் அவர் குறிப்பிட்டார்.

எவிஸ்பெரேரா தனது மனைவியுடன் விக்டோரியா பாலத்தால், அதிகாலையில் சென்றுகொண்டிருந்தபோது நபர் ஒருவர் அவரை ஆற்றில் தள்ளிவிட்டு அவரின் மனைவியிடமிருந்த பணத்தையும் சங்கிலியையும் அபகரித்துச் சென்றார். இதுசம்பந்தமாக பொலிசார் ஒரு குறித்த பெண்ணை விசாரணைக்காக கைதுசெய்துள்ளனர்.

0 0 0

### நகை, கார், பணம் கொள்ளை

முகமூடி அணிந்த ஆயுத கோஷ்டியினர் மீகம்மை பொலிஸ் பகுதியில் நகைகளை கொள்ளையடித்த மற்றொரு சம்பவம் நேற்று நடந்துள்ளது. வீட்டிலுள்ள ஏழு பேரைக் கட்டி வைத்துவிட்டு நகைகளையும் பணத்தையும் சொக்ஸ்வகன் காரையும் கொள்ளையடித்துச் சென்றுவிட்டதாகப் புகார் செய்யப்பட்டுள்ளது.

இக்கோஷ்டியினர் கைத்துப்பாக்கிகளுடன் சென்றனர். 3,450 ரூபா பெறுமதியான நகைகளையும் 4885 ரூபா ரொக்கப்பணத்தையும் கொள்ளையடித்துச் சென்றனரென்று கூறப்படுகிறது. வீட்டுச்சொந்தக்காரரின்

(5-ம் பக்கம் பார்க்க)

## தொழில் தகராறு

கொழும்பு, வியாழன்
தொழில் நீதிமன்றத்தில் இவ்வருடம் மேமாதத்துக்கு முற்பட்ட 6 மாத காலத்தில் 10 ஆயிரத்துக்கு மேற்பட்ட தொழிலாளர் பிணக்குகள் தீர்த்து வைக்கப்பட்டுள்ளன.

8,927 தொழில் தகராறுகள் தீர்த்து வைக்கப்பட்டன.

......

# ஆபிரிக்க விடுதலை இயக்கங்களுக்கு சகல உதவிகளும் அளிக்கவேண்டும்

## கூட்டுச்சேரா நாடுகளின் அமைச்சர்கள் மகாநாட்டில் கயானா பிரதமர்

ஜோர்ஜ்டவுன், ஆக 9 — லூசாகா மகாநாட்டில் இந்து சமுத்திரப் பிரதேசம் அமைதிப் பிரதேசமாக இருக்க வேண்டுமென எடுக்கப்பட்ட தீர்மானத்தை ஜோர்ஜ்டவுன் மகாநாடு உறுதிப்படுத்த வேண்டும் என்று கயானாப் பிரதமர் திரு. பென்ஹாம் கேட்டுக்கொண்டுள்ளார்.

கூட்டுச்சேரா நாடுகளின் வெளிஉறவு அமைச்சர்கள் மகாநாடு கயானாவின் தலைநகரான ஜோர்ஜ்டவுனில் ஆரம்பமாகியது. இந்த 4 நாள் மகாநாட்டை கயானாப் பிரதமர் திரு. பென்ஹாம் ஆரம்பித்து வைத்தார்.

திரு. பென்ஹாம் தனது உரையின்பொழுது வல்லரசுகள் எதிர்காலத்தில் அமைதியை ஏற்படுத்தும் முயற்சிகளுக்கு கூட்டுச்சேரா நாடுகளின் ஒற்றுமை வழிவகுக்கும். அபிவிருத்தி அடைந்த நாடுகள் அபிவிருத்தி அடையும் நாடுகளிலிருந்து பொருள்களை ஏற்றுமதி செய்வது நல்லது. ஒவ்வொரு நாடும் சமத்துவத்துடன் நடத்தப்பட வேண்டும் என்றார்.

ஆபிரிக்க விடுதலை இயக்கங்களுக்கு கூட்டுச்சேரா நாடுகள் ஆயுதம் மற்றும் உதவிகளை அளிக்க வேண்டுமென்றும் இஸ்ரேல் தான் கைப்பற்றிய அரபுப் பிரதேசங்களிலிருந்து முற்றாக வெளியேற வேண்டுமென்று அவர் மேலும் வலியுறுத்தினார்.

இந்த மகாநாட்டில் 60 நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் கலந்துகொள்கின்றனர். ஆபிரிக்க நாடுகளின் பிரதிநிதிகள் இம் மகாநாட்டில் பார்வையாளராகக் கலந்து கொள்கின்றனர்.

### சிலைகள்

இந்த மகாநாட்டை ஒட்டி ஜோர்ஜ்டவுனில் நான்கு தலைவர்களின் சிலைகள் திறக்கப்படுகின்றன. யூகோஸ்லாவிய ஜனாதிபதி மார்ஷல் டிட்டோ, காலஞ்சென்ற எகிப்திய ஜனாதிபதி கமால் அப்துல் நாசர், காலஞ்சென்ற இந்தியப் பிரதமர் ஜவஹர்லால் நேரு, கானாவின் காலஞ்சென்ற பிரதமர் என்குருமா ஆகியோருக்கே அங்கு நினைவுச்சின்னம் எழுப்பப்படுகிறது.

உகண்டாவிலுள்ள

## ஆசியாக்காரர் வருவதற்கு கென்யா தடை

நைரோபி, ஆகஸ்ட் 9 — உகண்டாவிலிருக்கும் பிரிட்டிஷ் பாஸ்போர்ட் வைத்திருக்கும் ஆசியாக்காரர்கள் கென்யாவுக்குள் நுழையாமல் தடுப்பதற்கு கென்யா அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

உகண்டா அதிபர் திரு. இடி அமீன் மூன்று மாதகாலத்துக்குள் உகண்டாவை விட்டு வெளியேறிவிட வேண்டுமென ஆசியாக்காரர்களுக்கு உத்தரவிட்டதையடுத்து அவர்கள் கென்யாவுக்குள் வந்துவிடலாமெனக் கருதியே கென்யா இந்நடவடிக்கையை எடுத்துள்ளது. உகண்டாவின் மேற்கில் கென்யா இருக்கிறது.

உகண்டாவுக்கும் கென்யாவுக்குமிடையில் 400 மைல் எல்லைப் பகுதிகளில் காவல் காப்பு உத்தியோகத்தர்களை நியமித்து அவர்களை உள்ளே நுழையாதபடி தடுக்கும் நடவடிக்கையை எடுத்துள்ளது.

## டுப்செக் காலத்து அதிகாரிக்கு தண்டனை

பிரேக், ஆக. 9 — செக்கோஸ்லவாக்கியா [illegible] டுப்செக்காலத்தவர்கள் பலர் விசாரணை செய்யப்படுவதோடு தண்டனையும் விதிக்கப்படுகின்றனர்.

டுப்செக்காலத்தில் ஒரு மாநிலத்தின் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவராக இருந்த பேராசிரியர் சலபோட்டாவுக்கு ஆறரை வருடக் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. இதுவரை டுப்செக்காலத்தில் பதவியிலிருந்த 14 பேருக்கு பலதரப்பட்ட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

திரு. டுப்செக் செக்கோஸ்லவாக்கியா கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளராவார்.

இவர் தனிமனித பத்திரிகை சுதந்திரம் போன்றவற்றை செக்கோஸ்லவாக்கியாவின் நடைமுறைக்குக் கொண்டுவந்து சீர்திருத்தங்கள் உட்பட ஜனநாயக பொருளாதாரச் சீர்திருத்தங்களைச் செய்தார்.

1968-ம் ஆண்டு ஜூலை மாதம் சோவியத் யூனியனும் மற்றும் வார்சோ ஒப்பந்த நாடுகளும் கடும் நடவடிக்கை எடுத்து டுப்செக்கின் நடவடிக்கைக்கு முற்றுப்புள்ளி வைக்க விரும்பினர்.

ஆகஸ்ட் 20-ம் திகதி ரஷ்யா, போலந்து, ஹங்கேரி, பல்கேரியா, கிழக்கு ஜேர்மனி ஆகிய நாடுகளைச் சேர்ந்த படைகள் செக்கோஸ்லவாக்கியாவுக்குள் புகுந்து கைப்பற்றினர்.

1969-ம் ஆண்டு ஏப்ரல் 17-ம் திகதி திரு. டுப்செக் கம்யூனிஸ்ட் கட்சித் தலைமைப் பதவியிலிருந்து ராஜினாமாச் செய்தார். இவரது இடத்துக்கு ரஷ்யாவின் ஆதரவாளர் ஹஸ்டாக் ஹூசாக் தெரிவுசெய்யப்பட்டார்.

சிறீவர் போட்டியிடுவதை

## ஜனநாயகக் கட்சி அங்கீகரித்தது

நியூயோர்க், ஆகஸ்ட் 9 — கென்னடி குடும்பத்தில் ஒருவரான திரு. சிறீவர் உப ஜனாதிபதித் தேர்தலில் ஜனநாயகக் கட்சி சார்பில் போட்டியிடுவதற்கு தெரிவு செய்யப்பட்டதை ஜனநாயகக் கட்சியின் மத்திய குழு ஏற்றுக்கொண்டுள்ளது.

வரும் நவம்பர் மாதத்தில் அமெரிக்காவில் நடைபெறவிருக்கும் அதிபர் தேர்தலில் ஜனநாயகக்கட்சி சார்பில் போட்டியிடுவதற்கு செனட்டர் மக்கோவன் தெரிவு செய்யப்பட்டார். அவர் தன் கட்சி சார்பில் உப ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட செனட்டர் எட்வர்ட் கென்னடியை நிறுத்த விரும்பிய பொழுதிலும் கென்னடி சொந்தக் காரணங்களுக்காகப் போட்டியிட மறுக்கவே திரு. ஈகிள்டனை தெரிவுசெய்தார். ஆனால் இவர் முன்பு மனநோய்க்காளாகிச் சிகிச்சை பெற்றவரெனக் கூறப்பட்டதாலும் அதனால் தமக்கு எதிர்ப்பு அதிகரிக்குமென்பதாலும் திரு. மக்கோவன் ஈகிள்டனை விட்டு வேறொருவரைத் தெரிவு செய்ய வேண்டி ஏற்பட்டது. முன்னாள் உப ஜனாதிபதி திரு. ஹம்பிரி, செனட்டர் மாஸ்கி ஆகியோரை உப ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்த மக்கோவன் விரும்பியபோதி

[4-ம் பக்கம் பார்க்க]


சேமிப்புத் தொகைகள்?

வளம் பெறுவதற்கு பாதுகாப்பான வழி

மெர்கன்டைல் கிறெடிற் லிமிட்டெட்

ஆயிரக்கணக்கானோர் எமது நிறுவனத்தில் நம்பிக்கை கொண்டுள்ளனர். பரீட்சித்துப் பார்த்து, நிரூபணமாகி உள்ளது. இலங்கையின் மிகப்பெரிய உறுதியான நிதிக் கம்பெனி, மெர்கன்டைல் கிறெடிற் லிமிட்டெட் உங்கள் முதலீடுகளுக்குப் பூரண உத்தரவாதம் வழங்குவதற்கும், ஒழுங்காக வட்டி வழங்குவதை உறுதி செய்வதற்குமான வளத்தினைக் கொண்டது.

மெர்கன்டைல் கிறெடிற் லிமிட்டெட்டில் பணம் போடும் பொதுமக்கள் தங்கள் பணத்தினை பெருக்கிக் கொண்டே வருகின்றனர். இப்பொழுது வைப்புத்தொகை இரண்டு கோடி ரூபாவையும் மிஞ்சி விட்டது. மெர்கன்டைல் கிறெடிற்லிமிட்டெட்டின் வாய்மையில் பொதுமக்கள் கொண்டுள்ள நம்பிக்கையின் தன்மையினை இது புலப்படுத்துகிறதல்லவா.

பின்வரும் திட்டங்களின் ஏதாவது ஒன்றில் நீங்களும் ஏன் முதலீடு செய்தல் கூடாது?

| 8% காலமுறை வைப்புப்பணம் | 12% தவணைமுறை வைப்புப்பணம் | 13% 14% நிலையான வைப்புப்பணம் |
|---|---|---|
| 3 மாத முன்னறிவித்தல் மீது மீளப் பெறக்கூடியது. | மாதவீத, 6 மாதவீத ஆண்டுவீத வட்டி செலுத்தப்படுவதற்குரியதாகும். | முதிர்வடைவதன் மீது வட்டி செலுத்தப்படுவதற்குரியதாகும். |

மெர்கன்டைல் கிறெடிற் லிமிட்டெட்

51-53 இராணி வீதி கொழும்பு-1. தொலைபேசி: 23283 – 4 – 5

யாழ் கிளை: 11/8 ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம் தொலைபேசி: 321.

ஏனைய முக்கிய நகரங்களில் ஏஜென்டுகள் உள்ளனர்.

MC.92

